# சென்னை மெட்ரோவுக்கு

# 10 ரெயில்கள் புதிதாக வருகை!

## விம்கோ நகர் வரை ஜூன் முதல் போக்குவரத்து!!

சென்னை, மார்ச். 06–

சென்னைமெட்ரோவுக்கு புதிதாக 10 ரெயில்கள் வந்துள்ளன. ஆகவே, ஜூன் மாதம் விம்கோ நகர் வரை போக்குவரத்து தொடங்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மெட்ரோ ரெயில் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி, சென்னை வண்ணாரப்பேட்டையில் இருந்து அண்ணாசாலை வழியாக விமான நிலையம் வரை ஒரு பாதையும், சென்ட்ரலில் இருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை அண்ணாநகர், கோயம்பேடு வழியாக ஆலந்தூர் வரை இன்னொரு பாதையும் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டது.

இந்த பணிகள் அனைத்தும்முடிந்துரெயில் போக்குவரத்துநடைபெற்று வருகின்றது. அதேநேரத்தில் வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரை ரெயில் பாதையை நீட்டிக்கவும் வகை செய்யப்பட்டது. அதற்கான பணிகள் நடந்து வந்தன.

மொத்தம் 9 கி.மீட்டர் தூரம் கொண்ட இந்த பாதை வரும் ஜூன் மாதம் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட கட்டத்தில் கூடுதல் ரெயில்கள் தேவைப்படும். அந்த வகையில்கடைசிகட்டமாக 10 புதிய ரெயில்கள் வந்துள்ளன.

ரெயில் பாதையானது ஜப்பான் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. அதேநேரத்தில் ரெயில் தொடர்கள் யாவும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அல்ஸ்தோம்என்றநிறுவனம் தயாரித்தது.

முதலில் பிரேசில் நாட்டில் உள்ள ஆலையில் இருந்துரெயில்கள்கொண்டு வரப்பட்டன. பின்னர் அதே நிறுவனத்தின் தொழிற்சாலை, ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீ சிட்டியில் தொடங்கப்பட்டது. அங்கு மீதமுள்ள ரெயில்கள் தயாரிக்கப்பட்டு வந்தன.